இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 22-06-2025

# இஸ்ரேல் அடங்க வேண்டும்!

உலகின் கவனத்தை அச்சமாக மாற்றி இருக்கிறது ஈரான் - இஸ்ரேல் தாக்குதல்கள்.

ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று 20 இசுலாமிய நாடுகள் கோரிக்கை வைத்துள்ளன. இஸ்ரேலும் ஈரானும் தங்களுக்கு இடையிலான மோதலை நிறுத்த வேண்டும் என்று ஜி7 நாடுகள் கூட்டமைப்பு வலியுறுத்தி உள்ளது. “ஈரான் சரணடைய வேண்டும்” என்று அமெரிக்காவும், “அந்த இரு நாடுகளுக்கு இடையே அமைதிப் பேச்சு நடத்தி வைக்கத் தயார்” என்று ரஷியாவும் அறிவித்துள்ளன. எனவே அனைத்துலக நாடுகளின் பிரச்சினையாக ஆகி இருக்கிறது ஈரான் - இஸ்ரேல் மோதல்கள்.

இஸ்ரேல் - ஈரான் இடையிலான போர்த் தாக்குதல்கள் தொடர்ந்து வலுத்து வருகிறது. கடந்த 16 ஆம் தேதி முதல் இது நடைபெற்று வருகிறது. இந்தத் தாக்குதலின் போது ஈரானில் இதுவரை 585 பேர் உயிரிழந்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. இதில் பொதுமக்கள் 239 பேர். பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள் 126 பேர்.

அணு அபாயம் ஏற்பட்டுள்ளதையும் இந்தத் தாக்குதல் உறுதி செய்துள்ளது. ஈரான் அணு ஆயுதம் தயாரிக்கிறது என்று சொல்லித்தான் இஸ்ரேல் இந்தத் தாக்குதலை நடத்துகிறது. மின்சாரம் தயாரிப்பு போன்ற பயன்பாட்டுக்குத்தான் அணுசக்தித் திட்டங்களைப் பயன்படுத்துவதாக ஈரான் சொல்லி வருகிறது. ஆனால் இதனை இஸ்ரேல் ஏற்றுக்கொள்ளவில்லை. ஈரானின் அணுசக்தித் திட்டங்களை முடக்கும் நோக்கத்தில்தான் ‘ஆபரேஷன் ரைசிங் லயன்’ என்ற தாக்குதலை இஸ்ரேல் கடந்த ஜூன் 13 அன்று தொடங்கியது. இதில் ஈரான் நாட்டின் முக்கியமான அணு சக்தி நிலையங்கள் சேதம் அடைந்தன. ஈரான் ராணுவத்தின் முக்கியத் தளபதிகள் சிலர் கொல்லப்பட்டனர்.

இதற்கு எதிரான பதில் தாக்குதலை ‘ஆபரேஷன் ட்ரூ ப்ராமிஸ் - 3’ என்ற பெயரில் ஈரான் தொடங்கியது. இஸ்ரேலின் முக்கியமான நகரங்களில் ஏவுகணைத் தாக்குதலை ஈரான் நடத்தியது. இஸ்ரேல் நாட்டின் உளவு அமைப்பான மொசாத் செயல்பாட்டு மையத்தின் மீது தாக்குதல் நடைபெற்றுள்ளது.

**ரஷியாவைச் சேர்ந்த வெளியுறவுச் செய்தியாளர், “இதுவரை கற்பனையாகச் சொல்லப்பட்டு வந்த அணு அபாய எச்சரிக்கை தற்போது உண்மையாகி வருகிறது. ஈரான் அணு சக்தி மையங்கள் மீது இப்போது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. அணுசக்தி மையங்கள் தாக்கப்பட்டு அணுக்கதிர் வீச்சு பரவினால் அது மேற்கு ஆசிய மண்டலத்துக்கு மட்டுமின்றி உலகத்துக்கே ஆபத்தாக முடியும்” என்று எச்சரித்துள்ளார். இதுதான் மிக மோசமானது ஆகும். உலக நாடுகள் கவலைப்படவும் இதுதான் காரணம் ஆகும்.**

ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று 20 இசுலாமிய நாடுகள் கோரிக்கை வைத்துள்ளன. “சர்வதேசச் சட்டங்களுக்கும் ஐ.நா.வின் வழிகாட்டுதல்களுக்கும் எதிராக ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. மத்திய கிழக்குப் பகுதியில் ஏற்கனவே பதற்றம் நிலவி வரும் சூழலில் இந்தத் தாக்குதல் நடத்தப்படுகிறது. இரு நாடுகளும் போரைக் கைவிட வேண்டும். ஈரானில் அணுசக்தி மையங்கள் மீது தாக்குதல் நடத்துவதால் அணுக்கதிர் வீச்சு அபாயம் உள்ளது. அந்த மையங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான தடைபட்ட பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்க வேண்டும். மத்திய கிழக்குப் பகுதியானது அணு ஆயுதமற்ற பகுதியாக இருக்க வேண்டும் என்பதே அரபு நாடுகளின் நீண்டகால நிலைப்பாடு. அந்த நிலை தொடர்வதற்கான அனைத்து ஆதரவையும் வழங்குவோம்” என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் தேவையில்லாமல் மூக்கை நுழைத்துள்ளார் அமெரிக்க அதிபர் டிரம்ப். ‘ஈரான் நிபந்தனையின்றி சரணடைய வேண்டும்’ என்று அவர் சொல்லி இருக்கிறார். இதனை ஈரான் அதிபர் கமேனி நிராகரித்து இருக்கிறார். “ஈரானின் வரலாற்றை அறிந்தவர்கள் ஈரானை மிரட்டும் மொழியில் பேச மாட்டார்கள். ஈரான் ஒருபோதும் சரண் அடையாது. இஸ்ரேலுடனான மோதலில் அமெரிக்கா ராணுவ வழியில் தலையிட்டால் அது அந்த நாட்டுக்கு ஈடு செய்ய முடியாத தீங்கை விளைவிக்கும். இஸ்ரேலுக்கு மிகவும் கடுமையான தண்டனை வழங்க நாங்கள் தயாராகி வருகிறோம்” என்று ஈரான் அதிபர் கமேனி சொல்லி இருக்கிறார். எனவே இது இப்போதைக்கு முடிவடைவதாகத் தெரியவில்லை.

இந்நிலையில் பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலும் கடந்த ஓராண்டு காலமாகத் தொடர்ந்து வருகிறது. கடந்த ஓராண்டு காலமாக 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காசா பகுதியில் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளார்கள். கொல்லப் பட்டவர்களில் 17 ஆயிரம் பேர் குழந்தைகள். 11 ஆயிரம் பேர் பெண்கள். 26 ஆயிரம் குழந்தைகள் தங்கள் பெற்றோரை இழந்துள்ளார்கள். 175 பத்திரிக்கையாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். 125 ஐ.நா. ஊழியர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். காசாவின் பெரும்பகுதி ஓராண்டு காலத்துக்குள் அழிக்கப்பட்டு விட்டது. இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு வாதத்துக்கு எதிராக பாலஸ்தீனம் போராடி வருகிறது.

**காசாவின் கான்யூனிஸ் நகரத்தில் உணவுப் பொருட்கள் வாங்குவதற்காக நின்று கொண்டிருந்த 45 பேரை இஸ்ரேல் ராணுவம் சுட்டுக் கொன்ற செய்தி இரண்டு நாட்களுக்கு முன் வந்துள்ளது. பட்டினியால் வாடும் பாலஸ்தீனர்கள் உணவுப் பொருள் ஏற்றி வரும் லாரியை எதிர்பார்த்துக் காத்திருந்த போது அவர்கள் மீது இந்தத் தாக்குதல் நடந்துள்ளது. இதைவிடக் கொடூரம் இருக்க முடியாது.**

இஸ்ரேல் அடங்க வேண்டும். உலக நாடுகள் இஸ்ரேலை அடக்க வேண்டும்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (20.6.2025) தலைமைச் செயலகத்தில், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் (பொறுப்பு) பிரதீப் யாதவ், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என். சுப்பையன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கீழடியில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்துகொண்ட

# ஒன்றிய பா.ஜ.க. அரசை அ.தி.மு.க. கண்டிக்காதது ஏன்?

## அமைச்சர் - முனைவர் டி.ஆர்.பி.ராஜா சரமாரி கேள்வி!

*சென்னை, ஜூன் 22 -*

*கீழடிக்காக ஒன்றிய பா.ஜ.க. அரசை எதிர்த்து அ.தி.மு.க. வாய் திறக்காமல் தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி மீது பாய்வது ஏன்? என்று அமைச்சர் முனைவர் டிஆர்பி ராஜா சரமாரி கேள்வி எழுப்பியுள்ளார்.*

*இது குறித்து அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-*

*தமிழர் நாகரீகம் உலகின் மூத்த நாகரீகம் என நிறுவும் கீழடி சான்றுகளை அவமதிக்கும் ஒன்றிய அரசின் அலட்சியத்தையும், மாற்றாந்தாய் மனப்பான்மையையும் எதிர்க்கட்சியான அ.தி.மு.க. இப்போது வரை கண்டிக்காதது ஏன்?*



*கீழடிக்காக அ.தி.மு.க. குரல் கொடுக்காதது ஏன்?*

*பா.ஜ.க.விடம் கூட்டணியில் இருப்பதன் ஒரே காரணத்திற்காக தமிழரின் தொன்மையான நாகரிகத்தைக் காக்க குரல் கொடுக்காமல் ‘உறங்குவது ஏன்’ என்ற நியாயமான கேள்வியை எழுப்பிய @DMKITWing பதிவிற்கு, தகாத அர்த்தங்களைக் கற்பித்து நமது எதிர்க்கட்சியினர் தங்களைத் தாங்களே ஏன் தாழ்த்திக்கொள்கிறார்கள்?*

*நியாயமாக வந்திருக்க வேண்டிய கோபம் என்ன?*

*தொன்மை தமிழர் நாகரீகத்தின் ஆதாரமான கீழடியை புறங்கையில் தள்ளும் ஒன்றிய மைனாரிட்டி பாஜக அரசின் நடவடிக்கைகளுக்கு அல்லவா கோபம் வந்திருக்க வேண்டும்?*

*இப்போது வரை அப்படியொரு கோபம் ஒன்றிய அரசின் மீதும், பா.ஜ.க. மீதும் அதிமுகவிற்கு வரவேயில்லையே ஏன்?*

*ஒன்றிய அரசின் வஞ்சகத்தை ஒருசேர எதிர்த்து நிற்க வேண்டிய நேரத்தில் இப்படி திசை திருப்பும் வேளைகளில் அற்பமாக இறங்குவது தமிழர் விரோத செயல் இல்லையா?*

*எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஆர்.பி. உதயகுமார் இன்று BP எகிறி கதறிக் கொண்டிருக்கிறார் என்று உடன்பிறப்புகள் தெரிவித்தனர் : )*

*ஆனால் தமிழ் வளர்த்த மதுரையைச் சேர்ந்த அண்ணன் அவர்கள்கூட இது வரை கீழடிக்காக குரல் கொடுக்கவில்லையே?*

*எது தடுக்கிறது?*

*என் மீது அவர் காட்டும் கோபம் ஏன் தமிழர் பெருமையை சிதைப்பவர்கள் மீது வரவில்லை?*

*இன்றுகூட மதுரையின் பெருமைக்காக அவர் பாய்ந்து எழாமல் “கீழடியை வைத்து நமது தொன்மையை நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை” என்று சொன்னவர் பேட்டி அளித்தது ஏன் !*

*@DMKITwing / #Wing2point0 #உடன்பிறப்புகளே!*

*எதிர்க்கட்சியினரின் அவதூறுகளை, என் மீதான அவர்களின் விமர்சனங்களை நான் பார்த்துக்கொள்கிறேன்.*

*பாவம், உண்மை தெரிந்தும் யாரோ சொல்லி சாடுகிறார்கள். அந்த அரசியல் எனக்கு தெரியும் : )*

*நீங்கள் உங்கள் உழைப்பை இந்த கவனச் சிதறல்களுக்கு இரையாக்க வேண்டாம் !*

*கழக மாணவரணி கீழடிக்காக மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருக்கிறார்கள். அதன் தாக்கத்தை மடைமாற்றவே அதிமுகவினர் கண்டதை வைத்து கம்பி கட்டுகிறார்கள்.*

*நாங்கள் கலைஞரின் வார்ப்புகள்.*

*எவர் எதிர் வரினும், எந்த இடர் வரினும், தமிழ்நாட்டின் நலனுக்காகவும், தமிழர் நலனுக்காகவும் இந்தப் போர் தொடரும்.*

*தமிழினத்தின் உரிமைக்காக போராடும், இரத்தம் சிந்தும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்கள் நாங்கள் !*

*இனத்தை, மொழியை அழிக்க நினைப்பவர்களுக்கும், துணை போகிறவர்களுக்கும் எதிரான முன்கள வீரர்களான @DMKITwing பணி தொடரும்.*

*கேள்விகளும் தொடரும்.*

*இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்துள்ளார்.*

### முதல்வர் மருந்தகம் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது!

# பாக்கெட் உணவு வகைகள் - விற்கப்படுவதாக கூறப்படும் செய்திகளில் உண்மை இல்லை!

## சந்தை விலையைக் காட்டிலும் 10 முதல் 90 விழுக்காடு குறைவான விலையில் விற்கப்படுகின்றன!

சென்னை, ஜூன் 22 -

முதல்வர் மருந்தகம் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்றும் பாக்கெட் உணவு வகைகள் விற்கப்படுவதாக கூறப்படும் செயல்களில் உண்மை இல்லை என்றும் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து முதல்வர் மருந்தகம் குறித்து நாளிதழில் வெளிவந்த தவறான செய்தி குறித்த மறுப்பறிக்கை வருமாறு:-

முதல்வர் மருந்தகங்களில் பாக்கெட் உணவுப் பொருட்கள் மற்றும் மாவு வகைகள் விற்கப்படுவதாகவும் வாடிக்கையாளர் வரத்து குறைவாக உள்ளதாகவும் மக்கள் எதிர்பார்க்கும் மருந்து வகைகள் கிடைக்காத நிலை உள்ளதாகவும் நாளிதழ் ஒன்றில் தவறான செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் ஆயிரம் முதல்வர் மருந்தகங்கள் உயிர் காக்கும் ஜெனரிக் மருந்துகள், நியூட்ராசுட்டிக் கல்ஸ், இந்திய மருந்துகள், சர்ஜிக்கல்ஸ் மற்றும் பிராண்டட் மருந்துகளை சந்தை விலையைக் காட்டிலும் 70 முதல் 90 விழுக்காடு குறைவான விலையில் விற்பனை செய்து வருகின்றன.

மருந்தகங்கள் துவங்கிய பிப்ரவரி மாதத்தில் நாளொன்றுக்கு சுமார் 300 ரூபாய் சராசரி மருந்து விற்பனை இருந்த நிலையில் இருந்து தற்போது நாளொன்றுக்கு சராசரியாக 800 ரூபாய்க்கு மேல் விற்பனை நடைபெற்று வருகிறது. மேலும் துவக்கத்தில் நாளொன்றுக்கு சராசரியாக 5 நபர்கள் ஒவ்வொரு மருந்தகத்திற்கும் வந்து கொண்டிருந்த நிலையில் தற்பொழுது நாளொன்றுக்கு சராசரியாக 20 நபர்கள் மருந்துகளை பெற்று பயனடைந்து வருகின்றனர்.

இதுவரை சுமார் 6 கோடி ரூபாய் மதிப்பிலான ஜெனரிக் மருந்துகளும் 2 கோடி ரூபாய் மதிப்பிலான பிராண்டட் மருந்துகளும் முதல்வர் மருத்துவங்கள் வாயிலாக மிக குறைந்த விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மருந்தகத்திலும் 219 ஜெனரிக் மருந்துகளும், 170 பிராண்டட் மருந்துகளும் போதிய அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இது மட்டுமல்லாமல் அந்தந்தப் பகுதிகளின் தேவைக்கேற்பத் தேவைப்படும் பிற மருந்துகளையும் அந்தந்த மாவட்டங்களிலேயே கொள்முதல் செய்து 24 மணி நேரத்தில் பொதுமக்களுக்குக் கொண்டு சேர்க்கும் நடைமுறையும் அண்மையில் கொண்டு வரப்பட்டுள்ளது.

முதல்வர் மருந்தகங்கள் நடத்தும் தொழில் முனைவோர் மற்றும் கூட்டுறவு சங்க மருந்தாளுனர்களுக்கு லாபத்தில் வழங்கப்பட்டு வந்த பங்குத்தொகையும் அதிகரிக்கப்பட்டு 75 சதவீதம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. விடுமுறை தினங்களில் பணிபுரியும் மருந்தாளுனர்களுக்கு ரூபாய் 1000 வரை ஊக்க தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு முதல்வர் மருந்தகங்கள் சிறப்பாக செயல்பட எல்லா விதமான நடவடிக்கைகளையும் கூட்டுறவுத்துறை எடுத்து வருகின்றது.

எனவே, பத்திரிகை செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாக்கெட் உணவு வகைகள் விற்கப்படுவதாக கூறப்படும் செய்திகள் உண்மை இல்லை.

இவ்வாறு செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.




மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறை சிக்னேச்சர் மினி திருமண மண்டபத்தில் நடைபெற்றது கூட்டத்தில் மண்டலச் செயலாளர், கழக முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர்வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரையாற்றினார். உடன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், பூம்புகார் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் மன்னை த.சோழராஜன், மாவட்ட கழக அவை தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணை செயலாளர் மு.ஞானவேலன் மற்றும் பலர் உள்ளனர்.